செ. கு. எண்: 0 17 நாள் : 09.04.2015

## மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்களின் அறிக்கை

கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் அஇஅதிமுக அரசு மக்கள் நலன் பயக்கும் பல்வேறு திட்டங்களை தீட்டுவதுடன், அவற்றை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது. முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் முடங்கிப் போன திட்டங்களைக் கூட விரைவுபடுத்தி திட்டத்தின் பயன்கள் மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மின் திட்டங்கள் ஆனாலும் சரி, குடிநீர் திட்டங்கள் ஆனாலும் சரி, உள்கட்டமைப்பு திட்டங்கள் ஆனாலும் சரி, அவற்றையெல்லாம் விரைந்து செயலாக்கத்திற்கு கொண்டு வருவதற்கான முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. இந்நிலையில், திட்டங்கள் முடிவடையும் தருவாயில், அதாவது ஒரு சில மாதங்களில் திட்டங்கள் முடிவடையும் என்ற நிலையை எட்டும் போது, அந்த திட்டங்கள் விரைந்து முடிக்கப்படவேண்டுமென அறிக்கைகள் வெளியிடுவதையும் அல்லது ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார் திரு.மு.க.ஸ்டாலின். அந்த வகையிலே தான் 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அஇஅதிமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டது என கிருஷ்ணகிரியில் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தார் திரு.மு.க.ஸ்டாலின். அதற்கு மறுப்பு தெரிவித்து துறை அமைச்சர் ஒர் அறிக்கை வெளியிட்டு அந்தத் திட்டம் இரண்டு மாதங்களில் நிறைவேற்றப்பட்டுவிடும் என தெரிவித்திருந்தார். அதற்கு திரு மு.க.ஸ்டாலின் ஒரு பதில் அறிக்கை வெளியிட்டு அதில் இன்னமும் இரண்டு மாதங்களில்

இந்த திட்டம் நிறைவேற்றப்படுகிறதா? என்பதை கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்கள் பார்க்க, தயாராக இருக்கிறார்கள் என்று கூறினார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை 29.5.2013 அன்று காணொலிக் காட்சி மூலம் துவக்கி வைத்து சொன்னதை சொன்னபடி நிறைவேற்றும் அரசு இது என்பதை நிரூபித்தார்கள். தற்போது வேலூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது என்பதை தெரிந்து கொண்ட திரு.மு.க.ஸ்டாலின், 6.4.2015 அன்று வேலூரில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார். இந்த இரண்டு நிகழ்வுகளையும் பார்க்கும்போது, முடியும் தருவாயில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என அறிக்கை விடுவதன் மூலமோ அல்லது ஆர்ப்பாட்டத்தின் மூலமோ, தன்னால் தான் இந்த திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட்டது என்று ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி, தமிழக மக்களை ஏமாற்றி விடலாம் என்றே திரு.மு.க.ஸ்டாலின் நினைக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. திமுகவினரின் இந்த பொய்களையெல்லாம் நம்பி ஏமாந்து விட தமிழக மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல! திமுகவினர் தான் மக்களை ஏமாற்ற முனைகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளும் அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள் தான் தமிழக மக்கள்.

வேலூரில் 6.4.2015 அன்று திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 25 விழுக்காடு பணிகள் தான் நிறைவு பெற்றுள்ளது என்றும் ஏப்ரல் மாதத்தில் இத்திட்டத்தின் மூலம் வேலூருக்கு குடிநீர் வழங்க முடியாது என்றும் மக்களை ஏமாற்றும் விதமாக தவறான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில், 8 பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்களான மதுரை– மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம், பல்லடம் கூட்டுக் குடிநீர் திட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 3 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்,

நாகப்பட்டினம் கூட்டுக் குடிநீர் திட்டம், ஆத்தூர் நரசிங்கபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகியவற்றிற்கு நிதி ஆதாரம் ஏதும் இறுதி செய்யப்படாமல் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கோரப்பட்டது. மேலும், இத்திட்டங்களுக்கு ஒப்பந்த நிறுவனங்களும் தேர்வு செய்யப்படவில்லை அதற்குரிய பணி ஆணைகளும் வழங்கப்படவில்லை.

ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னரே, கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் வெறும் அறிவிப்புகளோடு விட்டுச் செல்லப்பட்ட மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு **3276.62** கோடி ரூபாய் நிதி ஆதாரங்களை இறுதி செய்து அனைத்து திட்டங்களுக்கும் ஒப்பந்த நிறுவனங்கள் இறுதி செய்யப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

இது மட்டுமல்லாமல், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மக்களின் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் புதிதாக கடலூர் மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் இரு கூட்டுக் குடிநீர் திட்டங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் சேலம் மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் என எட்டு பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்களை ரூ.**2408.34** கோடி மதிப்பில் செயல்படுத்த உரிய ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் குடிநீர் திட்டங்களுக்காக **4943** கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

பொற்கால ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் குடிநீர் திட்டப் பணிகளுக்காக 7130.10 கோடி ரூபாய் செலவிடப்பட்டு மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது.

வேலூர் கூட்டு குடிநீர்த் திட்டத்தினை பொருத்த வரை 2011ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு, கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில், இத்திட்டத்திற்கு நிதி ஆதாரங்கள் எதுவும் இறுதி செய்யப்படாமல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்யாமலும், பணியாணைகள் எதுவும் வழங்காமலும் 25.1.2011 அன்று அவசர கோலத்தில் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இது “அரை படி அரிசி அன்னதானம்; விடியும் வரை மேளதாளம்” என்னும் சொலவடையைத் தான் நினைவுபடுத்துகிறது.

தமிழக மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், வேலூர் மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சனையை நிரந்தரமாக தீர்க்கும் பொருட்டு, 1295 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்திற்காக 30.12.2011 மற்றும் 5.3.2012 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டன.

நகரப் பகுதிகளில் இத்திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களால் ரூபாய் 1,044 கோடியே 90 லட்சம் வழங்கப்பட்டது. இதுதவிர, ஊரக பகுதிகளில் இத்திட்டத்தை செயல்படுத்த, தேசிய ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் 95 கோடி ரூபாயும், குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் ரூபாய் 147 கோடியே 90 லட்சமும், உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பாக ரூபாய் 7 கோடியே 20 லட்சமும் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டது.

வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு, கடந்த 4 ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றைய தேதி வரை 1059 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. 2011–12ம் நிதியாண்டில் 114.15 கோடி ரூபாயும், 2012–13ம் நிதியாண்டில் 207.04 கோடி ரூபாயும், 2013–14ம் நிதியாண்டில் 416.85 கோடி ரூபாயும், 2014–15ம் நிதியாண்டில் 318.75 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 1056.79 கோடி ரூபாய் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி **(TNUDF-Kfw),** ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் **(IUDM),** தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி **(TNUDF),** வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம் **(HUDCO),** தேசிய ஊரக குடிநீர் திட்டம் **(NRDWP),** குறைந்தபட்ச தேவை திட்டம் **(MNP / SMS)** மற்றும் உள்ளாட்சிகளின் பங்களிப்பு உள்ளிட்ட நிதி ஆதாரங்களின் மூலம் வழங்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

தற்போது, இத்திட்டத்தின் கீழ் மேட்டூர் தொட்டில்பட்டி பகுதியில் உள்ள தலைமை நீரேற்று நிலையம், கொம்புரான்காடு, பலக்காரனூர் மற்றும் முத்தம்பட்டி பகுதிகளில் உள்ள தொடர் நீரேற்று நிலையங்கள், கடத்தூர் பகுதியில் 90 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சமநிலை நீர்த்தேக்கத் தொட்டிப் பணிகள் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வேலூர் வரையில் 236 கி.மீ நீளத்திற்கு பிரதான குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், வேலூரிலிருந்து ஒச்சேரி வரையில் 51 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பதிக்க தேசிய நெடுஞ்சாலையின் அனுமதி கோரி 4.3.2011 அன்று விண்ணப்பிக்கப்பட்டு, அனுமதி கிடைக்க தாமதம் ஏற்பட்டதனால், பணிகளை விரைந்து முடிக்கும் வகையில் மேற்படி குழாய்கள் பதிக்கும் பணிகள் மாற்றுப் பாதை வழியான பாலாற்றங்கரையில் கொண்டு செல்ல 2.12.2014 மற்றும் 24.01.2015 ஆகிய தேதிகளில் ரூ. 11.56 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டது. தற்சமயம், 24 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டு, மீதமுள்ள 27 கி.மீ குழாய்கள் பதிக்கும் பணிகள் 2015 மே மாதத்தின் இறுதியில் முடிக்கும் வகையில் துரிதமாக நடைபெற்று வருகிறது. மேலும், ஒச்சேரியிலிருந்து அரக்கோணம் வரையிலான 32 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் முழுவதுமாக பதிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தில், இதுவரை 94 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

தற்பொழுது, சோதனை ஓட்டம் துவங்கப்பட்டு, 20.03.2015 முதல் காவிரி நீர், மேட்டூர் தொட்டில் பட்டியிலிருந்து சுமார் 236 கி.மீ தொலைவில் உள்ள வேலூர் மாநகராட்சி முத்துமண்டபம் அருகே கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, திருப்பத்தூர் முதல் வேலூர் மாநகராட்சி வரை உள்ள பயனாளிகள் 2015 ஏப்ரல் மாத இறுதிக்குள் பயன் பெறுவார்கள். மேலும் வேலூரிலிருந்து வாலாஜா வரையிலுள்ள பயனாளிகளுக்கு 2015 மே மாத இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். மீதமுள்ள பணிகள் முடிக்கப்பட்டு, அரக்கோணம் நகராட்சிக்கு 2015 ஜுன் மாத இறுதிக்குள் குடிநீர் வழங்கப்படும்.

உண்மை நிலை இவ்வாறு இருக்க, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும் இந்த ஆட்சியின் மீது அவதூறு பரப்பும் நோக்கத்துடன், மேற்கண்ட திட்டத்தில் 25 சதவீதப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது என்றும் காவிரி குடிநீர் வேலூர் மாநகருக்கு வருவது சாத்தியமில்லை என்றும் வெற்று விளம்பரத்திற்காக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார். வேலூர் மாநகருக்கு சோதனை ஓட்டத்தின் மூலம் குடிநீர் வந்து சேர்ந்துள்ளது என்பது வேலூர் மாநகர மக்களுக்கு நன்கு தெரியும்.

இத்திட்டத்தின் மூலம் வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள், 14 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 944 ஊரக குடியிருப்புகளில் உள்ள 24 இலட்சத்து 46 ஆயிரம் மக்கள் பயன்பெறுவர்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தினைப் பற்றி திரு.மு.க.ஸ்டாலின் குறிப்பிடுகையில் திமுக ஆட்சியில் 75 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டதாகவும், தற்போது பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் பொய்யான குற்றச்சாட்டினை கூறியுள்ளார்.

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் 2011ம் ஆண்டு மே மாதம் வரை ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் 169.25 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் அமைக்கும் பணிகள் மற்றும் 12 கட்டுமானப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு ரூ.186.85 கோடி மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. மொத்தத்தில் 18 சதவீதப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு, 11 சதவீத நிதி மட்டுமே செலவிடப்பட்டிருந்தது என்பதே உண்மை.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பணித்தள தடைகள் நீக்கப்பட்டு, பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. இத்திட்டத்திற்காக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1462.82 கோடி செலவிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மே 2013ல் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டிருந்த நிலையில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் கோடை கால குடிநீர் தேவைகளை கருத்திற் கொண்டு இத்திட்டம் 29.05.2013 அன்று மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கிவைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. தற்போது இத்திட்டத்தின் கீழ் மூன்று நகராட்சிகள், பர்கூர் தவிர 16

பேரூராட்சிகள் மற்றும் **6384** ஊரக குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக மொத்தம் **109** மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகப்பட்டு வருகிறது.

பர்கூர்–கிருஷ்ணகிரி பகுதியில், தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளால் தாமதப்பட்ட பர்கூர் பேரூராட்சி மற்றும் **1074** ஊரக குடியிருப்புகளுக்கும் மற்றும் தளி – கெளமங்கலம் வனப்பகுதிகளில் மின் இணைப்பு பெறுவதில் தாமதப்பட்ட **224** ஊரக குடியிருப்புகளுக்கும், மேலும் சித்தேரி – சித்திலிங்கி மலைப்பகுதிகளைச் சார்ந்த **34** ஊரக குடியிருப்புகளுக்கும் வரும் மே மாதத்திற்குள் குடிநீர் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த **4** ஆண்டுகளில் மட்டும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு **1462.82** கோடி ரூபாய் செலவிட்டு இதுவரை **99** சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டு தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை சார்ந்த **31** லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நாள்தோறும் **109** மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள **5** நகராட்சிகள், **11** பேரூராட்சிகள் மற்றும் இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலுள்ள **18** ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த **3163** குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் முறையாக **2001**ம் ஆண்டில் ஆட்சி பொறுப்பேற்றவுடன் **23.07.2001** ல் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரிவான திட்டமதிப்பீடு தயாரிக்க உத்தரவிட்டார்கள்.

மேலும், 24.01.2006 அன்று இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் கூடுதல் உள்ளாட்சிகளை சேர்த்து திட்டத்தினை மாற்றி அமைக்க முடிவெடுக்கப்பட்டு திட்ட மதிப்பீடு 616 கோடி ரூபாய்க்கு இறுதியாக்கம் செய்யப்பட்டது.

எனவே, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியால்தான் திட்ட அறிக்கை முழுவடிவம் பெற்றது.

பிறகு வந்த மைனாரிட்டி திமுக அரசு இத்திட்டப் பணிகளை வேகமாக முடிப்பதாகக் கூறிக்கொண்டு 11.06.2009ல் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு விட்டதாக அறிவித்து திட்டத்தையும் துவக்கி வைத்தது. ஆனால் உண்மையில் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளான பகிர்மானக் குழாய்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளிட்ட பணிகள் முழுமையாக முடிவு பெறவில்லை.

ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக 2011ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு விடுபட்ட பணிகளை முழுமையாக முடிப்பதற்காக 46.04 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டது.

இதுதவிர, இராமநாதபுரம், கீழக்கரை நகராட்சிகள் மற்றும் இளையான்குடி பேரூராட்சிக்கு 3 புதிய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் மற்றும் சுமார் 100 கி.மீ நீள பகிர்மானக் குழாய்கள் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 9.85 கோடி ரூபாய் மறுபடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டது.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக 2011ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு தான்

இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு முறையாக முழுமையான குடிநீர் வழங்கப்பட்டது.

மக்களுக்கு அத்தியாவசிய தேவையான குடிநீர் வழங்கும் குடிநீர்த் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது அஇஅதிமுக அரசு தான். இந்த அரசால் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் பயன் அடைந்துள்ள மக்கள் இந்த அரசை பாராட்டி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி செலுத்தி வருகிறார்கள். எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கம் உள்ள தமிழக மக்களை பொய் பிரச்சாரங்களாலும், வெற்று ஆர்ப்பாட்டங்களாலும் திரு.மு.க.ஸ்டாலின் போன்றவர்களால் திசை திருப்பிவிட இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(எஸ்.பி.வேலுமணி)
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**